மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,

பல்லாவரம்.

**O.S.No.609/2023**

**OLD.No.992/2014**

**PW 1**

இந்நீதிமன்றத்தில் Gr-III பெஞ்ச் கிளார்க் திரு.பூபதி அவர்களால் பிரமாணம் செய்விக்கப்பட்டு மனுதாரர்/எதிர்மனுதாரர் தரப்பில் சாட்சிகளின் வாக்குமூலம் 1973ஆம் ஆண்டின் 10வது சட்டத்தின் வரைமுறைக்கு உட்பட்டு இன்று 2024ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 13ஆம் நாள் என்னால் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : நரேந்திரன் | மதம் | : இந்து |
| தந்தை / கணவர் பெயர். | : சண்முகம் | ஊர் | : |
| வயது | : | | |
| தொழில் | : | | |
| இனம் | : | | |
| கிராமம் | : | | |

**குறுக்கு விசாரணை**

எனது பிரமாண வாக்குமூலத்தில் குறிப்பிட்டவாறு இவ்வழக்கின் பிராதிவாதி சிட்டி பாபு என்பவர் எனது தூரத்து உறவினரா என்றால் ஆம். எனது தகப்பனார் பெயர் சண்முகம் என்றும், அவரின் தகப்பனார் பெயர் முருகன் என்றால் ஆம். எனது தாத்தா முருகன் என்பவரின் வாரிசு சான்றிதழில் எனது தகப்பனார் பெயர் இடம் பெற்றுள்ளது என்றால் ஆம். முருகன் என்பவரின் வாரிசு சான்றிதழில் பிரதிவாதி சிட்டிபாபு பெயர் இடம் பெற்றுள்ளதா என்றால் ஆம். இவ்வழக்கின் பிரதிவாதி என் மீதும், எனது தகப்பனார் மீதும் அவரை கொலை மிரட்டல் விடுத்து மிரட்டி வந்ததாக பல்லாவரம் காவல் நிலையத்தில் புகார் கொடுக்கப்பட்டுள்ளதா என்றால் இல்லை.

2011 யிலிருந்து இன்றைய தேதி வரை தாவா சொத்திற்கான மின் இணைப்பு பிரதிவாதி பெயரில் உள்ளது என்றால் இல்லை. எனது தாத்தா முருகன் என்பவர் பிரதிவாதி சிட்டிபாபுவின் தகப்பனார் என்றால் இல்லை. நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் 31.12.2012 தேதியிட்ட

செண்டில்மெண்ட் பத்திரத்தில் உள்ள கையொப்பம் எனது பாட்டி தனலட்சுமி என்பவரின் கையொப்பம் என்றால் ஆம். நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் செண்டில்மெண்ட் பத்திரத்தின் ஒப்பந்தத்தில் உள்ள கையொப்பம் என்னுடைய பாட்டி தனலட்சுமி என்பவருடையது என்றால் இல்லை. மேற்குறிப்பிட்ட இரண்டு பத்திரத்தில் உள்ள இரண்டு கையொப்பங்களை ஒப்பிட்டு பார்க்க தடய அறிவியல் நிபுணரிடம் அனுப்பி வைக்க ஆட்சேபனை உள்ளதா என்றால் ஆம்.

05.09.2011 தேதியன்று எனது பாட்டி தனலட்சுமி என்பவர் பிரதிவாதி சிட்டிபாபு என்பருக்கு எழுதிக்கொடுத்த செண்டில்மெண்ட் பத்திரத்தை அவருக்கு சொத்து கிடைக்ககூடாது என்ற தீய எண்ணத்தில் அவற்றை மறைத்து வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை முழுமையாக முடிவுற்றது.**
**மறு விசாரணை- இல்லை.**
S/d xxxx

Typewritten to my dictation in open court read over to the witness in tamil in the presence of the accused and admitted by the witness to be correct.
S/d xxxx
District Munsif-cum
Judicial Magistrate,
Pallavaram.